| விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயர்துளி | | |
|---|---|---|
| மழைத்துளி சேமிப்பீர் | | குடிநீரை பெருக்குவீர் |

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் அவசரக்கூட்டம் வருகிற 28.04.2023 – ஆம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்காணும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும். தவறாது கலந்து கொள்ளும்படி உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1. இந்நகராட்சியில் 15 வது நிதிக்குழு மானியம் (Untied Grant) 2022–23 ன் கீழ் கிருஷ்ணா நகர் 4வது மெயின் ரோடு (057001R0035) , காளியண்ணன் எக்ஸ்டன்சன்-2 (057001R0047) (2011-12), பாஸ்கரன் வீதி (057012R0403) (2016-17), குப்பம்மாள் லே அவுட் (057022R0620) (2011-12), குப்பம்மாள் லே அவுட் 1 (057022R0621) (2011-12), குப்பம்மாள் லே அவுட் 2 (057022R0622) (2011-12), குப்பம்மாள் லே அவுட் 3 (057022R0623) (2011-12), குப்பம்மாள் லே அவுட் 4 057022R0624) (2011-12), குப்பம்மாள் லே அவுட் 5 (057022R0625) (2011-12) , சிவசண்முகம் வீதி முதல் லேன் (057022R0728), சிவசண்முகம் வீதி முதல் வீதி (057022R0726) , குப்பன் வீதி (057022R0835), பீட்டர் வீதி (057022S0080), பீட்டர் குறுக்கு வீதி (057022R0836) , ஆகிய இடங்களில் தார்சாலைகள் மேம்பாட்டு பணிகளை ரூ.62.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.448 நாள்.13.04.2023–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 19.04.2023 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்.VBN பில்டர்ஸ் ஒப்பந்ததாரர் |
| 2 | திருவாளர்.Vino கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்ததால் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு 24.04.2023 –ல் விலை விவரங்கள் அடங்கிய உறை திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பு ரூ. | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.VBN பில்டர்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருப்பூர். | **(ரூ 5971484.70)** | **0.01 சதவீதம்**<br>மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட குறைவு<br>**(ரூ. 5970896.62)** |
| 2 | திருவாளர்.Vino கன்ஸ்ட்ரக்ஷன்<br>ஒப்பந்ததாரர்,<br>பவானிசாகர் | | **0.99 சதவீதம்**<br>மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட அதிகம்<br>**(ரூ.6030617.32)** |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட 0.01% சதவீதம் குறைவாக வழங்கியுள்ள திருவாளர்.VBN பில்டர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1240/2022/இ1)

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

அ.). மன்றம் அனுமதிக்கலாம்

ஆ). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று Letter of Acceptance வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு அ.அனுமதிக்கப்பட்டது.**

**ஆ. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.480**

2. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணியினை செய்வதற்கு 20.04.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 தினசரி சந்தை வளாகத்தில் பொது கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் | **4,00,000** | **திரு .V.தங்கராஜ் ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 1.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **திரு.V.தங்கராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு. 1). அனுமதிக்கப்பட்டது**

**2). ஏற்றுக்கொள்ளப்பட்டது, மன்றத்தீர்மான எண்.481**

3. இந்நகராட்சியின் 2023-24 ஆம் ஆண்டிற்கான எழுதுபொருட்கள்ள பதிவேடுகள் படிவங்கள், இரசீதுகள், கணினி மற்றும் கணினி தொடர்பான உபகரணப் பொருட்கள் மற்றும் ஜெராக்ஸ் மெசின் டோனர்கள் கொள்முதல் செய்ய குறைந்த விலைப்புள்ளி அளித்த ஈரோடு மாவட்ட அச்சகத் தொழில் கூட்டுறவு சங்கம், இண்ட் 1765, ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.482**

4. இந்நகராட்சியின் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்படும் ஒப்பந்த்தாரர்களின் வைப்பு தொகையானது மூன்றாண்டிற்கு மேல் காலாவதியான வைப்பு தொகையாகிறது. ஒப்பந்ததாரர்கள் பணி முடிவுற்று தங்களது வைப்பு தொகையை திரும்ப கோரும் பொழுது அத்தொகையை காலாவதியான வைப்பு தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.483**

5. கோபிசெட்டிபாளைம் நகராட்சி 01.10.1949இல் அரசாணை எண்.1948 நாள் 01.10.1949 ன்படி, மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்ட்டது. அரசாணை எண் 194 நாள்.10.02.1970 இரண்டாம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண்.1532 நாள் 21.09.1977 ன்படி முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை எண்.238 நாள்.02.12.2008 ன் படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 59523 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 66000/-ஆகும். நகராட்சியின் பரப்பளவு 7.51 சதுர கிலோ மீட்டர் ஆகும். நகரம் 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 425 தெருக்கள் அமைந்துள்ளது.

கோபிசெட்டிபாளையம் நகராட்சியானது ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சியின் கிழக்கு பகுதியில் குள்ளம் பாளையம் மற்றும் பாரியூர் வெள்ளாளபாளையம் கிராம ஊராட்சியும், மேற்கே லக்கம்படட்டி பேரூராட்சியும், தெற்கு மொடச்சூர் கிராம ஊராட்சியும், வடக்கே பாரியூர் கிராம ஊராட்சியும் அமைந்துள்ளது.

இந்நகராட்சியின் எல்லையில் இருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் இந்து சமய அறநிலையத்திற்கு சொந்தமான அருள்மிகு பாரியூர் கொண்டத்து காளியம்மன் திருக்கோயில், 1 கிலோ மீட்டர் தொலைவில் அருள்மிகு பச்சைமலை பாலமுருகன் திருக்கோவில் மற்றும் 2 கிலோ மீட்டர் தொலைவில் அருள்மிகு பவளமலை முத்துகுமாரசாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோவில்களின் ஆண்டு திருவிழாவில் கலந்து கொள்வதற்கு சுமார் 1 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் அன்றைய நாட்களில் (Floating Population) நகரத்திற்குள் வந்து செல்கின்றனர்.

இந்நகராட்சி எல்லையில் இருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஈரோடு மாவட்டத்தின் சுற்றுலா தளமான கொடிவேரி அணைக்கட்டுக்கு இந்நகராட்சியின் வழியாகவே சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

ஈரோட்டில் இருந்து அருள்மிகு ஸ்ரீபண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், மைசூர் செல்வதற்கு இந்நகராட்சி வழியாகவே செல்ல வேண்டியுள்ளது. இந்நகராட்சி மாவட்டத்தின் மைய பகுதியாக அமைந்துள்ளது.

நகராட்சியின் எல்லைக்குள் தினசரி மார்க்கெட்-1, வாரச்சந்தை -1 , உழவர் சந்தை -1 , மீன் வளத்துறையால் நடத்தப்படும் அங்காடி -1 , Multiplex திரையரங்கம் -1 , பெரிய திருமண மண்டபங்கள்-6, சிறிய அளவிலான திருமண மண்டபங்கள்-6 அமைந்துள்ளன.

நகரமயமாதலின் விளைவாக நகராட்சியின் எல்லைக்கு அருகில் புதியதாக உருவாகியுள்ள ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு பணிபுரிய வருடம் முழுவதும் 3 இலட்சத்துக்கு அதிகமான பணியாளர்கள் (Flooting Population ) நகராட்சிக்கு வந்து செல்கிறார்கள் .

இந்நகராட்சி எல்லைக்குள் BSNL, அஞ்சலகம், மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகம், காவல் நிலையம், சார் ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட அரசு

தலைமை மருத்துமனை, வட்டார போக்குவரத்து அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பத்திர பதிவு துறை அலுவலகம், தேசிய மற்றும் நெடுஞ்சாலை துறை அலுவலகம், பொது பணி துறை அலுவலகம் மற்றும் பயணியர் மாளிகை, அரசு மேல்நிலைப்பள்ளி–3, அரசு உயர்நிலைப்பள்ளி–2, அரசு நடுநிலைப்பள்ளி–3, அரசு ஆரம்பப்பள்ளி–3, அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகள் –3 , தனியார்பள்ளிகள்–5, அங்கன்வாடி மையங்கள்–5, நியாய விலைக்கடைகள்–21, வங்கிகள்–18, அமைந்துள்ள பெரிய நகராகும்.

நகராட்சியின் எல்லையில் சுமார் 5000 மாணவ மாணவியர் பயிலும் கோபி கலை அறிவியல் கல்லூரி , சுமார் 2000 மாணவியர் பயிலும் PKR மகளீர் கலை அறிவியல் கல்லூரி அமைந்துள்ளது.

அரசாணை நிலை எண் 113. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 30.08.2019ன்படி, நகராட்சிகளின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நகராட்சியின் தரத்தினை வகைபாடு செய்தல் குறித்து வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண் | நகராட்சியின் நிலை | ஆண்டு வருவாய் |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | ரூ.15.00 கோடிக்கு மேல் |
| 2 | தேர்வு நிலை | ரூ.9.00 கோடிக்கு மேல்<br>ரூ.15.00 கோடிக்குள் |
| 3 | முதல் நிலை | ரூ.6.00 கோடிக்கு மேல்<br>ரூ.9.00 கோடிக்குள் |
| 4 | இரண்டாம் நிலை | ரூ.6.00 கோடிக்குள் |

மேற்கண்ட அரசாணையின் வழிகாட்டுதல்களின்படி, கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் கடந்த மூன்றாண்டுகளின் வருவாய், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் ஆண்டு தணிக்கைச்சான்றுகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ.எண் | ஆண்டு | வருவாய் ரூ.(கோடியில்) |
|---|---|---|
| 1 | 2019–2020 | 17.28 |
| 2 | 2020–2021 | 17.59 |
| 3 | 2021–2022 | 18.57 |

மேலும் வருகின்ற நிதியாண்டில் இந்நிலையில் இந்நகராட்சியானது 75வது பவள விழா ஆண்டினை அடையவுள்ளதால் கோபிசெட்டிபாளையம் நகராட்சியினை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் வகைபாடு நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்க பரிந்துரை செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநரக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.777/2023/சி1)

**அலுவலகக்குறிப்பு**: நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உரிய கருத்துரு அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.484**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36 D 2709 க்கு கீழ்க்கண்ட வாகன பழுதுகளை செய்து தரும் பணிக்கு 18.04.2023ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வாகன பழுதுகளின் விவரம்

| வ.எண் | பணியின் பெயர் |
|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம்<br>TN 36 D 2709 க்கு பேட்டரி பழுது பார்த்தல் |

விலைப்புள்ளிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | சண்முகா இண்டஸ்ட்ரீஸ்<br>1எ, முத்துஸா வீதி கோபி | ரூ.15,000 |
| 2 | மாதேவரன் ரீ வைண்டிங் ஒர்க்ஸ்<br>முத்துஸா வீதி கோபி | ரூ.15,420 |
| 3 | திலகா இண்டஸ்ட்ரியல்ஸ்<br>ஒத்தக்குதிரை கோபிசெட்டிபாளையம் | ரூ.15,725 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் இறுதி செய்திட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.608/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2.வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.15,000/- அளித்துள்ள சண்முகா இண்டஸ்ட்ரீஸ்1எ, முத்துஸா வீதி கோபி அவர்களின் விலைப்புள்ளிகளை அங்கீகரித்து பணி உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2).சண்முகா இண்டஸ்ட்ரீஸ் –ன் குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது**
**மன்றத்தீர்மான எண்.485**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36 F 7005 க்கு கீழ்க்கண்ட வாகன பழுதுகளை செய்து தரும் பணிக்கு 18.04.2023 ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
வாகன பழுதுகளின் விவரம்

| வ.எண் | பணியின் பெயர் |
|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 36 F7005 க்கு பேட்டரி பழுது பார்த்தல் |

விலைப்புள்ளிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | Sri Ragaventhira Auto mobiles<br>3A Bajanai Koil st Gobichettipalayam | Rs.7,500 |
| 2 | Shree Ragaventhira Electro Equipments Ltd<br>Gobichettipalayam | Rs.7,700 |
| 3 | Sri Batteries<br>387, Kullampalayam Privu<br>Gobichettipalayam | Rs.7,900 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் இறுதி செய்திட மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.609/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.7,500/- அளித்துள்ள Sri Ragaventhira Auto mobiles Gobichettipalayam அவர்களின் விலைப்புள்ளிகளை அங்கீகரித்து பணி உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2)Sri Ragaventhira AutoMobiles – ன் குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது,**
**மன்றத்தீர்மான எண்.486**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021–22 ன் கீழ் ராமர் எக்ஸ்டன்சன் –8 வார்டு எண்.2 ல் கூடுதல் நவீன வசதிகளுடன் தானியங்கி LPG மயானம் (Fully Automatic System )அமைக்க ( பொது மக்கள் பங்குத்தொகை ரூ.150.00 இலட்சம் மற்றும் அரசு நிதி 90.00 இலட்சம் ) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.27519–40/2021/P2 நாள்.21.05.2022 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.களண்.201/2022–23 நாள்.16.03.2022 ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணிகளை மேற்கொள்ள திருவாளர்.விஜய் ஸ்ரீ பில்டர்ஸ் அவர்களுக்கு 29.08.2022 ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டது. இப்பணிக்கான ஒப்பந்தக்காலம் 12 மாதங்கள் ஆகும் . பணி உத்திரவு வழங்கப்பட்டு 8 மாதங்கள் ஆகியும் பணி துவக்க நிலையிலேயே உள்ளது. மேலும் இப்பணிக்கான பொது மக்கள் பங்களிப்பு நாளது தேதி வரையில் 40.66 இலட்சம் மட்டுமே பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையினை இரு மாதங்களுக்குள் செலுத்த மேற்படி நிறுவனத்தால் பத்திரத்தில் கையொப்பமிட்டு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீதமுள்ள பங்களிப்பு தொகையை பெறப்பட்டு பணியினை முடிக்க கால தாமதம் ஆவதாலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வின் அடிப்படையில் தற்போது பயன்பாட்டில் உள்ள எரிவாயு தகன மேடை வளாக கட்டிடம் நல்ல நிலையில் உள்ளதால் புதியதாக எரிவாயு தகன மேடை வளாக கட்டிடம் கட்டாமல் பழைய கட்டிட வளாகத்தில் நவீன வசதிகளுடன் தானியங்கி LPG மயானம் (Fully Automatic System) புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ள திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.120.00 இலட்சம் ஆகும். எனவே ரூ.220.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள நவீன எரிவாயு தகன மேடை பணிக்கு பதிலாக தற்போது பயன்பாட்டில் உள்ள எரிவாயு தகன மேடை வளாக கட்டிடத்தில் நவீன வசதிகளுடன் தானியங்கி LPG மயானம் (Fully Automatic System) புனரமைத்தல் பணியாக மாற்றம் செய்ய திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெற மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.3297/2021/இ1)

**அலுவலக குறிப்பு :–** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணி திட்ட பணியாக உள்ளதால் மேற்படி பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும்2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.487**

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி